# "ஓம் நமோ நாராயணாய"

படைப்பின் தத்துவங்கள் அநந்தமானவை . . .

ஒலிக்கடல்: அநந்தமான - எண்ணத் தொலையாத - எண்ண எண்ண எண்ண எண்ண எண்ண எண்ணத் தொலையாத - ஒலிக்கடல். இந்த ஒலியுலகத்தில் எண்ணத் தொலையாத ஸ்தாயிகள் - நிலைகள் - படிகள் இருக்கின்றன. கிளிக்குஞ்சு கத்தும் ஒலி, சந்திர மண்டலம் இடிந்து பூமிமேல் விழுந்தால் அதிலுண்டாகும் ஒலி, ஊழிக்காற்றின் ஓலம், சூரியகோளமும் அதனைச் சூழ்ந்த கிரக குடும்பமும் தம்முள்ளே மோதி இடிபட்டுச் சிதறிப் பொடியாவதை நாம் கற்பனை செய்ய முடியுமானால், இந்த மோதலிலிருந்து உண்டாகும் கர்ஜனை - இந்த அநந்தமான ஸ்தாயிகளில் மனிதனுடைய செவிகளுக்கு எட்டக்கூடிய ஸ்தாயிகள் ஏழுதான் என்று ஜகதீச சந்திர வசு கணக்குச் சொல்கிறார்.

ஒளிக்கடல்: அநந்தமான - எல்லையில்லாத, எல்லையேயில்லாத ஒளிக்கடலில் மனிதனின் புலனுக்கெட்டுவது ஏழு ஸ்தாயிகள். மனிதன் இருளாகக் கருதுவதை ஆந்தை ஒளியாகக் கருதுகிறது. ஒளி விஷயத்தில் ஆந்தை நம்மைக் காட்டிலும் 'கீழ்ஸ்தாயி' பழகியிருக்கிறது. ஆனால் பருந்து சூரியனைக் கூசாமல் பார்க்கிறது. எனவே ஒளி விஷயத்தில் நம்மைக் காட்டிலும் பருந்துக்கு 'மேல்ஸ்தாயி' எட்டுகிறது.

இதுபோலச் சைதந்யம் - மனிதனின் உணர்வு - அறிவு - அநந்தமான ஸ்தாயிகளைக் கொண்டது. இந்த எல்லையற்ற கடலில் மனிதனுக்கு இரண்டு மூன்று ஸ்தாயிகள் மாத்திரமே சாதாரண நிலையில் எட்டுகின்றன. சாதாரணமாக நமக்குத் தென்படுகிற இந்த இரண்டு மூன்று ஸ்தாயிகளிலும் கூட, ஆரோஹண அவரோஹண வரிசைகளிலும், ஸ்வரக்கோவைகளிலும், ராகவேற்றுமைகளிலும் நாம் எண்ணிறந்த, விசித்திர விசித்திரமான, அனுபவங்கள் பெறுவது சாத்தியம்.

ஒருசில மனிதருக்குச் சைதந்யத்தில் எட்டு, ஒன்பது ஸ்தாயிகள் எட்டுகின்றன. இவர்களை மகாத்மாக்களென்றும், அவதாரபுருஷர்களென்றும் கொண்டாடுகிறோம்.

யோகசித்தியிலே சில படிகள் ஏறினவர்களுக்குக் 'கீழ்ச்சைதந்ய' உலகத்தில் சில புதிய வெடிப்புக்கள் திறந்து, அங்கிருந்து அற்புதமான சில அனுபவங்கள் கைகூடுகின்றன. கங்கையின் பிரவாகம் வானத்திலிருந்து இறங்கிப் பூமண்டலத்தைக் கடந்து பாதாளத்திற்கு இறங்கியது போல - 'மேற்சைதந்ய'த்தின் கற்பனைக்கெட்டாத வியப்புக்கள், சாதாரண உணர்வு நிலையைக் கடந்து 'கீழ்ச்சைதந்யத்'தில் இறங்கி இவர்களிடம் சில அற்புதமான அனுபவங்களைத் தோற்றுவிக்கின்றன. பூமண்டலத்தின் மத்தியில் உறைந்துகிடக்கும் நெருப்பு அவ்வப்போது சில மலைத்திறப்புக்களில் ஏறி வெடித்து வெளிவருவது போல - 'கீழ்ச்சைதந்ய' மண்டலத்தில் இறங்கி உறைந்திருக்கும் வியப்புக்கள், இந்த மஹான்களிடத்தில் அவ்வப்போது அற்புதமான கனவுக் காட்சிகளாக வெளிப்படுகின்றன.

இந்தக் கனவுகள், நனவில் தோன்றும் அனுபவங்களைக் காட்டிலும் மிகவும் தெளிவும் உயிர்ப்பும் வாய்ந்த உண்மைக் காட்சிகள். நம் காதுகளுக்கு எட்டாத கிளிக்குஞ்சு கத்தும் ஒலி, நம் கண்களுக்குப் புலப்படாத ஆந்தை, பருந்து இவற்றின் ஒளிவிஷயத்தைப் பற்றிய அனுபவம் -

எத்தனைக்கெத்தனை உண்மையோ, அத்தனைக்கத்தனை இந்தக் கனவுக் காட்சிகளும் உண்மையான நிகழ்ச்சிகளே.

"ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய."

யாரோ மெல்லிய குரலில் உச்சரிக்கும் சப்தம் கேட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் பாரதி திடுக்கிட்டுக் கண்விழித்துக் கொள்கிறார்.

அறையின் மூலையில் ஒரு சிறு கைவிளக்கு மென்மையாக எரிந்து கொண்டிருக்கிறது. சன்னலின் பாதி மூடிய கதவினூடே மங்கிய நிலவொளி அறைக்குள்ளே புகுந்து, கைவிளக்கின் ஒளியோடு சேர்ந்து கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது. அவரைத் தவிர அந்த அறையில் வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

நெற்றியில் துளிர்த்து மண்டியிருக்கும் வியர்வையை அருகே வைத்திருக்கும் கைத்துண்டால் துடைத்துக் கொள்கிறார் பாரதி. காற்றோட்டமில்லாமல், மூச்சு நெஞ்சுக்குள்ளேயே அடைத்துக் கொள்வதுபோல் இறுக்கம் தோன்றுகிறது.

பாரதி படுக்கையிலிருந்து எழுந்து மெதுவாகச் சன்னலை நோக்கி நடக்கிறார். அசதியினாலும், உடலில் வலுவில்லாததாலும் நடை தள்ளாடுகிறது. சன்னலை அடைந்ததும் ஒரு கையால் சுவற்றைப் பிடித்து நின்றுகொண்டு, மற்றொரு கையால் சன்னல் கதவை விசாலமாகத் திறந்து வைக்கிறார். குளிர்காற்று 'ஜில்'லென்று முகத்தில் வந்து அடிக்கிறது.

வெளியே பூத்தூவலாக மழை தூறிக் கொண்டிருக்கிறது. கருமேகங்களுக்கிடையே மறைந்திருக்கும் நிலவு மங்கலாகப் பிரகாசித்து நள்ளிரவின் கருமையை விரட்ட முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இரவெல்லாம் பெய்த மழையால் வீட்டுக்கூரைகளும் பூமியும் நனைந்து ஈரத்தில் ஊறிப்போயிருக்கின்றன.

மீண்டும் படுக்கைக்குத் திரும்பிய பாரதி தலையணைகளைச் சுவற்றோடு சேர்த்துப் போட்டுக்கொண்டு அவற்றில் வசதியாகச் சாய்ந்து உட்கார்ந்துகொள்கிறார். அபரிமிதமான களைப்பினால் அவர் கண்கள் தாமே மூடிக் கொள்கின்றன.

"ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய."

இந்த முறை சப்தம் முன்னைக்காட்டிலும் தெளிவாகக் கேட்கிறது. சமுத்திரத்தின் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாய்க் கரையில் வந்து மோதுவது போல, நாராயணமந்திரம் காதுகளில் அலையலையாய் வந்து மோதுகிறது. பாம்புப்பிடாரன் பலவகைகளில் சுருட்டிச் சுருட்டிப் பின்னும் குழலிசை போல, நாராயணமந்திரத்தின் நாதம் காதுகளில் சுருள்சுருளாக வந்து பாய்கிறது.

மூடியிருக்கும் கண்களை வலுக்கட்டாயமாகத் திறந்து எதிரே பார்க்கிறார் பாரதி.

கைவிளக்கின் ஒளியில், சன்னல் புறமாக ஒரு சிறுவன் நின்றுகொண்டிருப்பது அவர் பார்வைக்கு மங்கலாகப் புலப்படுகிறது.

தெய்விகமான, சுந்தர வடிவம். முகத்தில் பூரண நிலவின் ஒளி பொங்குகிறது.

சிறுவனின் கண்கள் மூடியிருக்கின்றன. அவன் கைகள் தாமரை மொட்டுப்போல் கூப்பியிருக்கின்றன. அவன் உதடுகள் நாராயணமந்திரத்தை இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டிருக்கின்றன.

பாரதியின் நெஞ்சு வேகமாக அடித்துக்கொள்கிறது. படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, பாதி மூடியிருக்கும் கண்களை முழுவதுமாகத் திறந்து மீண்டும் எதிரே பார்க்க முயற்சி செய்கிறார்.

எதிரே நின்று கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லை!

சுவற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவின் படம் காற்றில் லேசாக அங்குமிங்குமாகச் சாய்ந்து ஆடிக் கொண்டிருக்கிறது.

உயிரும் சதையுமாக எதிரே நின்றுகொண்டு நாராயணமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்த சிறுவன் திடீரென்று எப்படி மாயமாய் மறைந்து போகமுடியும்? இனிமையும் தெளிவும் நிறைந்த குரலில் அவன் மீண்டும் மீண்டும் உச்சரித்த மந்திரத்தின் நாதம் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறதே!

இது கனவாக இருக்கமுடியாது. திருவல்லிக்கேணியில் - கோவிலுக்குப் புறத்தே இருக்கும் தம் வீட்டில் - அவர் சுயநினைவோடு தம் படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் கண்கள் திறந்திருக்கின்றன. புலன்கள் யாவும் விழிப்புடனே இருக்கின்றன. இப்படியிருக்கும்போது, கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அவர் பார்த்த காட்சியும் கேட்ட ஒலியும் எப்படிப் பொய்யாகப் போகமுடியும்?

பாரதி ஆயாசத்துடன் படுக்கையில் சாய்ந்துகொள்கிறார். உடம்பில் சோர்வு; நாவிலே வறட்சி. உடல் முழுவதும் தீயைப்போல ஒரு வெம்மை பரவியிருக்கிறது.

பிரம்மாண்டமானதொரு மண்டபம். ஓங்கி உயர்ந்து நிற்கும் அந்த விசாலமான மண்டபத்தின் கூரையைப் பெரிய பெரிய தூண்கள் தாங்கியிருக்கின்றன. மண்டபத்தின் ஒருபுறத்தே உயரமாக எழுப்பப்பட்டிருக்கும் பளிங்குமேடை. மேடையில் ஏறுவதன் பொருட்டுக் கட்டப்பட்டிருக்கும் படிகளுக்கும் மண்டபவாயிலுக்கும் இடையே நீண்டு விரிந்துகிடக்கும் செந்நிறப் பட்டுக்கம்பளம்.

மேடையிலே பொன்னும் மணிகளும் வைரவைடூரியங்களும் கொண்டு இழைக்கப்பட்டதொரு சிம்மாசனம். அதன் இரு பக்கங்களிலும் வேலைப்பாடுகள் நிறைந்த ஆசனங்கள். ஆங்காங்கே தந்தங்களிழைத்த விளக்குக் கம்பங்கள், பலவகையான மலர்த்தோரணங்கள், கண்ணையும் கருத்தையும் கவரும் சித்திரங்கள் முதலியவை மண்டபத்தை அணி செய்கின்றன.

விளக்குக் கம்பங்களிலிருந்து வீசும் காந்தவொளி கண்களைக் கூசச்செய்கிறது. பாரதி கண்களைச் சுருக்கியவாறு மண்டபத்திற்குள்ளே கூர்ந்து பார்க்கிறார். ஒளி கண்களுக்குப் பழகப் பழக, மண்டபத்துக் காட்சிகள் அவருடைய கண்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் புலப்படத் தொடங்குகின்றன.

'ஆ! மறைந்துபோன சிறுவன் இதோ, இங்கே நிற்கிறான்!'

மஞ்சள்நிறப் பட்டு உத்தரீயம்; சிவந்த சிறு பாதங்களுக்கு மேலே பளிச்சிடும் தண்டை; செவிகளில் அசைந்தாடும் சிறு குண்டலங்கள்; உச்சியில் சேர்த்து முடித்த கொண்டை.

சிறுவனுக்கெதிரே பிரம்மாண்டமானதோர் உருவம் நின்று கொண்டிருக்கிறது. பொன்னிறப் பட்டாடைகள்; மார்பிலும் தோள்களிலும் சுடர்விட்டுப் பொலியும் அணிகள்; தலையிலே ஒளிவிடும் மணிக்கிரீடம்.

கைகூப்பி நிற்கும் பிரகலாதனுக்கு முன்னே, ஹிரண்யன் முகத்திலும் கண்களிலும் கோபம் கொந்தளிக்க நின்று கொண்டிருக்கிறான். சிறுவன் தயக்கமில்லாமல் அவனுக்கு எடுத்துரைத்த 'ஸர்வ நாராயண ஸித்தாந்தம்' அவன் அறிவைக் குருடாக்கி, அவன் நெஞ்சத்தைக் கனன்றெழச் செய்திருக்கிறது.

"ஹிரண்யன்: உன்னுடைய நாராயணன் எங்கிருக்கிறான்?

பிரகலாதன்: ஸர்வ பூதங்களிலும் இருக்கிறான்.

ஹிரண்யன்: நரகத்தில் இருக்கிறானா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: துன்பத்தில் இருக்கிறானா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: மரணத்தில் இருக்கிறானா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: உன்னுடைய 'ஸர்வ நாராயண ஸித்தாந்தத்'தின் துணிவு யாது?

பிரகலாதன்: எல்லா வஸ்துக்களும், எல்லா லோகங்களும், எல்லா நிலைமைகளும், எல்லாத் தன்மைகளும், எல்லாச் சக்திகளும், எல்லா ரூபங்களும், எல்லாம் ஒன்றுக்கொன்று ஸமானம்.

ஹிரண்யன்: நீயும் கழுதையும் ஸமானந்தானா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: அமிருதபானமும், விஷபானமும் ஸமானமா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: ஸாதுவும், துஷ்டனும் ஸமானமா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: அசுரர்களும், தேவர்களும் ஸமானமா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: ஞானமும், அஞ்ஞானமும் ஸமானமா?

பிரகலாதன்: ஆம்.

ஹிரண்யன்: ஸுகமும், துக்கமும் ஸமானமா?

பிரகலாதன்: ஆம். ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்."

ஹிரண்யனின் கோபம் மூண்டெழுகிறது.

"உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?" என்று மகனைக் கேட்டுச் சிங்கம் போல் உறுமுகிறான் ஹிரண்யன்.

"ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய."

"உந்நத மலைமுடி மீதினிலிருந்து நான் உன்னை உருட்டிக் கீழே தள்ளுவேன்," என்று ஹிரண்யன் மகனை அச்சுறுத்துகிறான்.

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

“நடுப்பனிக் கடலில் திமிங்கில வாய்க்குனை நான் கொண்டு திணிப்பேன்,” என்று இரைச்சலிடுகிறான் தீயோன்.

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

“தீயிலுன்னைச் சுட்டு வெண்சாம்பராய்ச் செய்திடுவேன்.”

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

“உன்னைக் கல்லில் கட்டிக் கடலில் எறிவேன்.”

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

“தின்னும் புலிவாயில் உன்னைக் கொண்டு செலுத்துவேன்.”

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

“உனது இடுப்பை ஒடித்து, இங்கு உனை நான் தின்பேன்.”

ஹிரண்யனின் கர்ஜனை மண்டபத்தில் அலையலையாக எதிரொலிக்கிறது.

பிரகலாதனின் கண்கள் மூடுகின்றன. எதிரே நிற்கும் தந்தையின் உருவம் அவன் பார்வையிலிருந்து மறைந்து, அவன் நெஞ்சம் உள்நோக்கித் திரும்பி அங்கே சதாகாலமும் குடிகொண்டிருக்கும் நாராயணனைத் தியானிக்கிறது.

“ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய.”

ஹிரண்யனின் வெறி உச்சநிலை யடைகிறது.

எதிரே உயர்ந்து நிற்கும் தூணைத் தன் வலக்காலால் ஓங்கி உதைத்த கொடியோன், “எங்கே, இந்தத் தூணில் உன் நாராயணனைக் காட்டு,” என்று இடிபோல் உறுமுகிறான்.

அண்டகோளங்கள் சிதறித் தூள்தூளாகப் போகும் ஒலி.

வானம் இடிந்து விழுகிறது; பூமி பிளந்து அனலைக் கக்குகிறது; ஊழிக்காற்று பேரிரைச்சலிடுகிறது; நாலா பக்கங்களிலிருந்தும் கடல் பொங்கியெழுந்து வந்து பூமண்டலத்தை விழுங்குகிறது.

தூண் இரண்டாகப் பிளந்து அதிலிருந்து நரசிம்மம் வெளிப்பட்டு ஹிரண்யன் மீது பாய்கிறது.

பாரதி எழுந்து நிற்கிறார்.

அவர் உடல் நடுங்குகிறது; பயத்தினால் அவர் கால்களும் கைகளும் தொய்ந்து போகின்றன; காதுகள் கேட்கும் சக்தியிழந்து செவிடாகிப் போகின்றன; நாவு உலர்ந்து மேலண்ணத்தோடு ஒட்டிக் கொள்கிறது; கண்கள் இமைப்பதை மறந்து சிம்மத்தின் மீது நிலைகுத்தி நிற்கின்றன; நெஞ்சு படபடத்துப் புடைத்துத் துடிக்கிறது.

கீதையில் - மஹாவிஷ்ணுவின் விசுவரூபத்தைக் கண்டு பெருவியப்பும் அச்சமும் எய்தி, மெய்ந் நடுக்கத்துடன், வாய்குழறி, அர்ஜுனன் சொன்ன வாசகங்களை நினைவுகூர்ந்து - பாரதி பிரார்த்தனை செய்கிறார்:

“பெருந்தோளாய், பல வாய்களும், விழிகளும், பல கைகளும், பல கால்களும், பல வயிறுகளும், பல பயங்கரமான பற்களுமுடைய நின் பெருவடிவைக் கண்டு உலகங்கள் நடுங்குகின்றன. யானும் அங்ஙனமே.

"வானைத் தீண்டுவது, தழல்வது, பல வர்ணங்களுடையது, திறந்த வாய்களும், கனல்கின்ற விழிகளுமுடையது, இனைய நின் வடிவத்தைக் கண்டு, விஷ்ணுவே! எனக்கு நிலைகொள்ளவில்லை, யான் அமைதி காணவில்லை.

"அஞ்சுதரும் பற்களை யுடைத்தாய், ஊழித்தீ போன்ற நின் முகங்களைக் கண்ட அளவிலே, எனக்குத் திசைகள் தெரியவில்லை; சாந்தி தோன்றவில்லை. தேவர்களின் தலைவனே, வையகத்துக்கு உறைவிடமாவாய், அருள் செய்க.

"ஓம், சாந்தி, சாந்தி, சாந்தி."

நெடுநேரம் கழித்து பாரதி கண்களைத் திறந்து பார்த்தபொழுது அங்கே மண்டபமும், தூணும், சிறுவனும், ஹிரண்யனும், சிம்மமும் இல்லை.

பாரதியை ஆட்கொண்டிருந்த அச்சமும் திகைப்பும் விலகி, அவர் நெஞ்சில் விவரிக்கமுடியாத - எல்லையில்லாததோர் - ஆனந்தமும், அமைதியும் குடிகொள்ளுகின்றன. உடலைத் தீயாக எரித்துக் கொண்டிருந்த வெம்மை தணிந்து, அவர் உடல் குளிர்ச்சியடைகிறது.

பாரதி சிறிது சிரமத்துடன் மெதுவாக எழுந்து, வியர்வையில் நனைந்து தொப்பலாகியிருக்கும் ஆடைகளைக் களைந்து வேறு புதிய உடைகளை அணிந்துகொள்கிறார். வெள்ளை வெளேரென்ற வேஷ்டியும் மேல்சட்டையும் அணிந்து, கண்ணாடிக்கெதிரே போய் நின்று தலைப்பாகையைத் திருத்தமாகக் கட்டிக்கொண்ட பாரதி, கண்ணாடியில் பிரதிபலிக்கும் தம் முகத்தை உற்றுப்பார்க்கிறார்.

கன்னத்தில் சதைப்பற்றே இல்லாமல் தாடையின் இருபக்கங்களிலும் எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கின்றன. கண்களுக்கடியில் பெரிய குழிகள் விழுந்து, கண்கள் ஆழத்தில் அழுந்திக் கிடக்கின்றன. ஆனால், எப்பொழுதும் போல் முகத்திலுள்ள ஒளியும் கம்பீரமும் சற்றும் குறைந்திருக்க வில்லை. ஆழத்தில் அழுந்தியிருக்கும் கண்களில் அசாதாரணமான தெளிவும் அமைதியும் குடிகொண்டிருக்கின்றன.

பாரதி விரைப்பாக நடந்து வந்து படுக்கையில் படுத்துக்கொள்கிறார்.

"மஹாசக்தி, நீ இப்போது என்னுள்ளே நிறைந்திருக்கிறாய்.
இப்போது எனதுயிரிலே வேகமும் நிறைவும் பொருந்தியிருக்கின்றன.
இப்போது எனதுடலிலே சுகமும் வலிமையும் சேர்ந்திருக்கின்றன.
இப்போது என்னுள்ளத்திலே தெளிவு நிலவிடுகின்றது.
இப்போது என்னுள்ளே நீ கொலுவீற்றிருக்கிறாய்.

"நான் கடவுள், நான் நலிவிலாதோன், நான் அமரன்.
எனக்கு அழிவில்லை, சோர்வில்லை, பயமில்லை, மரணமில்லை.
நான் விஷ்ணு. சாந்தியாகிய பாற்கடலிலே, ஞானம் என்ற பாம்பின் மீது நான் சயனம் செய்து கொண்டிருக்கிறேன்.
நான் மஹாவிஷ்ணு, நான் நாராயணன்."

பாரதி நிமிர்ந்து படுத்துக் கைகள் இரண்டையும் மார்பில் சேர்த்து வைத்துக்கொண்டு, முகத்தை உயர நிமிர்த்திக் கண்களை மூடிக்கொள்கிறார்.

மேகக் கூட்டத்தினின்றும் விடுதலைப்பட்ட நிலவின் ஒளி, சன்னல் வழியாக வந்து அவர் முகத்திலே பாய்ந்து சுடர் வீசுகிறது.